பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**13 06 2026** **06 45**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரான்ஸ் மற்றும் ஸ்லோவாக்கிய குடியரசில் மூன்று நாள் அரசு முறை பயணம் மேற்கொள்கிறார்.

**2.** ரயில்வே பணியாளர் தேர்வு வாரியத்தின் தேர்வு நடைமுறைகளை மேலும் வெளிப்படைத் தன்மையுடனும், துல்லியமாகவும் நடத்த ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.

**3.** திமுக ஆட்சிக் காலத்தில் கூடுதலாக மின் உற்பத்திக்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் குற்றம் சாட்டியுள்ளார்.

**4.** சட்டவிரோதமாக செயல்படும் கல்குவாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

**5.** இந்தியா - ஆஃப்கனிஸ்தான் இடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரான்ஸ் மற்றும் ஸ்லோவாக்கியா குடியரசில் மூன்று நாள் அரசு முறை பயணம் மேற்கொள்ள உள்ளார்.

இதற்காக இன்று அவர் பிரான்ஸ் நாட்டின் நீஸ் நகருக்கு செல்கிறார்.

ஸ்லோவாக்கிய தலைநகரான பிராட்டிஸ்லாவாவில் பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்தப் பயணத்தின் போது, பிரதமர் திரு நரேந்திர மோடி ஸ்லோவாக்கியப் பிரதமர் திரு ஃபிகோவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளார்.

இருநாடுகளுக்கு இடையே புதிய துறைகளில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவது குறித்தும் இந்த பயணத்தின் போது ஸ்லோவாக்கிய தலைவர்களுடன் பிரதமர் ஆலோசனை நடத்த உள்ளார்.

அந்நாட்டின் குடியரசுத்தலைவர் திரு பெல்லெக்ரினியையும் பிரதமர் திரு மோடி சந்திக்க உள்ளார்.

இந்தியா - ஸ்லோவாக்கியா இடையே இருநாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் **2024**-ல் ஒரு பில்லியன் அமெரிக்க டாலரைத் தாண்டி, கடந்த ஆண்டு ஒன்று புள்ளி **8** பில்லியன் அமெரிக்க டாலரை எட்டியது.

<<<<>>>>

ரயில்வே பணியாளர் தேர்வு வாரியத்தின் தேர்வு நடைமுறைகளை மேலும் வெளிப்படைத் தன்மையுடனும் துல்லியமாகவும் நடத்த ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று ரயில்வே உயர் அதிகாரிகளுடன் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பேசியபோது இதனைத் தெரிவித்த அமைச்சர், துறை ரீதியான தேர்வுகளை கணினி வழித் தேர்வுகள் முறைக்கு மாற்றுவதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

தேர்வு நடைமுறைகளை வேகமாகவும், திறமையாகவும் மாற்ற டேப்லெட் வாயிலாகத் தேர்வுகளை நடத்துவதை ஊக்குவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்நிலையில் கடந்த நிதியாண்டில் ரயில்வேயில் 47 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களுக்கு நடத்தப்பட்ட தேர்வுகளில், 43 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நீட் மறுதேர்வெழுதும் மாணவர்களுக்குத் தேசியத் தேர்வு முகமை கூடுதலாக 15 நிமிடங்கள் வழங்க முடிவு செய்துள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

போபால் விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் 21-ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்வு மிகவும் நேர்த்தியாக நடத்தப்படும் என்று அவர் மாணவர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

மாணவர்கள் அனைவரும் நம்பிக்கையுடன் தேர்வை சந்திக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

முன்னதாக, நீட் மறுதேர்வு ஏற்பாடுகள் குறித்து மத்திய அமைச்சரவைச் செயலாளர் திரு டிவி சோமநாதன், தேசியத் தேர்வு முகமையின் தலைமை இயக்குநருடன் ஆலோசனை நடத்தினார்.

சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, மறுதேர்வை எந்தவிதக் குளறுபடியுமின்றி வெளிப்படையாகவும் பாதுகாப்பாகவும் நடத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

இந்நிலையில் வினாத்தாள் கசிவு குறித்து மத்திய புலனாய்வு அமைப்பு தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறது.

<<<<>>>>

திமுக ஆட்சிக் காலத்தில் கூடுதலாக மின் உற்பத்திக்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் குற்றம் சாட்டியுள்ளார்.

கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோடை காலத்தில் மின் தேவை அதிகரிக்கும் என்று தெரிந்தும் அதற்கான முன்னேற்பாடுகளை கடந்த கால அரசு மேற்கொள்ளவில்லை என்று கூறினார்.

மின் உற்பத்திக்காக 7 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டதாக கூறப்பட்டாலும், மின் கட்டமைப்புகளை மேம்படுத்த 627 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டதாக திரு. செங்கோட்டையன் தெரிவித்தார்.

<<<<>>>>

மாநிலத்தில் சட்டவிரோதமாக செயல்படும் கல்குவாரிகள் மற்றும் அனுமதிச் சீட்டு இல்லாமல் கனிமங்களை எடுத்துச் செல்லும் வாகனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

கல்குவாரிகளின் செயல்பாடுகள் தொடர்பாக சென்னையில் நேற்று கனிமவளத்துறை அமைச்சர் திரு. டி.கே. பிரபு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய அவர், கல்குவாரிகள் மூலம் வருவாயை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறியுமாறு கேட்டுக்கொண்டார்.

சட்ட விதிகளுக்கு உட்பட்டு செயல்படும் குவாரி மற்றும் கல் உடைக்கும் பணிகளை மேற்கொள்ளும் உரிமைதாரர்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் உடனுக்குடன் நிறைவேற்ற வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தியதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தது தொடர்பாக காவல்துறை அதிகாரிகளிடம் நேற்று இரண்டாவது நாளாக விசாரணை நடைபெற்றது.

சம்பவத்தின்போது காவல் ஆய்வாளராக இருந்தவர்கள் மற்றும் 3 உதவி ஆய்வாளர்களிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

<<<<>>>>

வளிமண்டல சுழற்சி காரணமாக மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் வட தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் இன்று இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஏனைய தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டியில் நேற்றிரவு சூறைக் காற்றுடன் கனமழை பெய்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த மழை காரணமாக பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்ந்துள்ளது.

இன்றும் கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதால் மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டத்திலும் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளது.

இதன் காரணமாக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்காவுடனான இடைக்கால ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தாத வரை அந்நாட்டுடன் அணுசக்தி பேச்சுவார்த்தைகள் நடைபெறாது என்று ஈரான் கூறியுள்ளது.

------------

தைவான் எல்லைக்குள் சீனாவின் ராணுவ விமானங்கள் மற்றும் சிறிய கப்பல்கள் அத்துமீறி நுழைந்துள்ளதாக அந்நாடு குற்றம் சாட்டியுள்ளது.

------------

தட்டம்மையால் பாதிக்கப்பட்டுள்ள மாலத்தீவுக்கு இந்தியா மருத்துவ உதவிகளை அனுப்பி வைத்துள்ளது.

------------

விழுப்புரம் மாவட்டம் கோட்டகுப்பம் பகுதியில் இடுகாடைப் பயன்படுத்துவதில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக மாவட்ட ஆட்சியர் தலைமையில் சமாதான பேச்சுவார்த்தை நேற்று நடைபெற்றது.

------------

பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு பால் உற்பத்தயாளர் சங்கத்தினர் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

------------

நடப்பு நிதியாண்டில் திருச்சி ரயில்வே கோட்டம், சரக்குப் போக்குவரத்து மூலம் 777 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது.

------------

குருவாயூரில் இருந்து சென்னை எழும்பூர் வரை இயக்கப்படும் விரைவு ரயில் இம்மாதம் 20ஆம் தேதி முதல் 29ஆம் தேதி வரை திரிசூர், பாலக்காடு, பொள்ளாச்சி, திண்டுக்கல் வழியாக இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் படை வீரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாநில மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சரத்குமார் வழங்கினார்.

------------

சென்னை ராயப்பேட்டையில் தேசிய மாம்பழத் திருவிழாவை மாநில வேளாண் அமைச்சர் திரு. வினோத் நேற்று தொடங்கி வைத்தார்.

------------

*__விளையாட்டுச் செய்திகள்__*

இந்தியா - ஆஃப்கனிஸ்தான் இடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

தரம்சாலாவில் நடைபெற உள்ள இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

------------

உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் கனடா - போஸ்னியா இடையிலான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

டொரான்டோவில் இன்று அதிகாலை நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

அமெரிக்கா - பராகுவே அணிகளுக்கு இடையேயான ஆட்டம் லாஸ் ஏஞ்சல்சில் தற்போது நடைபெற்று வருகிறது.

--------------

மகளிர் உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 87 ரன் வித்தியாசத்தில் இலங்கையை வென்றது.

மற்றொரு போட்டியில் அமெரிக்கா 5 விக்கெட் வித்தியாசத்தில் கனடாவை வென்றது.

**<<<<The End>>>>**